DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.19 of 2023**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W.19 (L.W.28) | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | திரு. வேலு தேவர் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 09.03.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 08.06.2022ம் தேதி

ஏரியூர் வட்ட காவல் ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது பெரும்பாலை காவல் நிலைய குற்ற எண். 72/2022 பிரிவு 341, 302 IPC படி வழக்கினை எனக்கு முன்னால் உள்ள காவல் ஆய்வாளர் பழனிசாமி முதல் விசாரணை முடித்து வைத்ததை பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்து, அவர் வரைந்த பார்வை மகஜர், மாதிரி வரைபடம் போதுமானது என்பதால் நான் தனியாக தயார் செய்யவில்லை. சாட்சிகளை விசாரணை செய்ததில் அவரிடம் கூறியதை போல் என்னிடமும் கூறியதால் நான் சாட்சிகளிடம் தனியாக எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை. அன்றைய தினமே வழக்கில் அயிட்டம் 1ல் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களும் இறந்தவரின் உடலின் மேல் இருந்த சொத்துக்களை தனி அறிக்கை மூலம் ஒப்படைத்ததையும் அயிட்டம் 2ல் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களும் பிரேத பரிசோதனையின் போது பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட இரத்த மாதிரிகளையும் தருமபுரி வட்டார தடய அறிவியல் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு கீழ்க்கண்ட

அயிட்டம் 1 மற்றும் 2ல் கண்ட கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களில் இரத்த கரை ஏதாவது உள்ளதா, அவ்வாறு இருந்தால் அது மனித இரத்தம் தானா, மேற்படி கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தில் உள்ள இரத்தம் எந்த வகையை சார்ந்தது, மேற்படி கைப்பற்றப்பட்ட அயிட்டம் 1 மற்றும் 2 ல் சொத்துக்களில் உள்ள இரத்தம் ஒருவருடையது தானா, மேற்படி அயிட்டம் 1 மற்றும் 2ல் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களில் இரத்த கரை இருந்ததால் அவைகளில் உள்ள இரத்தமும் வரிசை எண் 14ல் உள்ள இரத்தமும் ஒரே வகையை சேர்ந்ததா என்று வேண்டுகோள் கடிதம் குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தேன். அந்த தனி அறிக்கை **அ.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.06.2022ம் தேதி நீதித்துறை நடுவர் அவர்களிடம் உத்தரவு பெற்று முதல் நிலை காவலர் 1125 சரவணன் என்பவர் மூலம் வட்டார தடய அறிவியல் கூடம் தருமபுரி அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். 14.07.2022ம் தேதி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வாகனம் TN73 D 2777 என்ற வாகனம் எந்த வகை என்றும் அதன் உரிமையாளர் யார் என்றும் அறிய வேண்டி ராணிப்பேட்டை வட்டார

போக்குவரத்து அலுவலருக்கு வேண்டுகோள் கடிதம் காவலர் 1984 பசுபதி மூலம் கொடுத்து அனுப்பினேன். அன்றைய தினமே மோட்டா வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காவலர் பசுபதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். TN 73 D 2777 இரு சக்கர வாகனத்தின் உரிமையாளரான சான் பாஷா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 16.07.2022ம் தேதி வழக்கு கோப்பினை புதிதாக பொறுப்பேற்ற காவல் ஆய்வாளர் திரு.யுவராஜ் என்பவரிடம் ஒப்படைத்தேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

08.06.2022ம் தேதி வழக்கு கோப்புகளை பார்வையிட்டு வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்டேன். அன்றைய தினமே சாட்சிகளை விசாரித்தேன். சாட்சிகள் சகுந்தலா, பழனிசாமி, சௌந்தர்யா, சிவா, அன்னகிளி ஆகியோர் அனைவரும் TN 73 D 2777 என்ற கார் சம்பவம் நடப்பதற்கு முன்தினம் சகுந்தலா, கந்தசாமி அவர்களின் செங்கல் சூளை வழியாக போனதாக இறந்த கந்தசாமி அவர்களிடம் சொன்னதாக சொல்லியுள்ளார். இந்த விவரம் புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான். விசாரணையில் அந்த பதிவெண் இரு சக்கர வாகனம் என்று தெரிய வந்தது. அந்த பதிவெண் உள்ள வாகனத்தை விசாரித்தபோது அது கார் அல்ல, இரு சக்கர வாகனம் என்று தெரிய வந்தது. அங்கு கார்தான் வந்தது என்றாலும் அதை நான் சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பென்னாகரம்–மேச்சேரி சாலையில் தான் சம்பவம் நடந்தது. கண்காணிப்பு கேமிரா மூலம் அந்த கார் எந்த வழியாக போனது என்று நான் விசாரித்திருக்கலாம் என்றால் கண்காணிப்பு கேமிரா எதுவும் அந்த ரோட்டில் இல்லை. பெரும்பாலை ஒரு டவுன் என்பதால் அங்கு கண்டிப்பாக ஏதாவது ஒரு கடையில் சிசிடிவி கேமிரா இருந்திருக்கும் என்றும் நான் சரிவர விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேச்சேரி போகும் வழியில் தான் பழையனூர் செக் போஸ்ட் உள்ளது. அந்த இடத்தில் கண்காணிப்பு கேமிரா இருக்கும் என்றால் சரிதான்.

கந்தசாமியின் இறப்பிற்கு அந்த காரில் வந்தவர்கள்தான் காரணம் என்றாலும் நான் அது சம்மந்தமாக சரிவர விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கை பொறுத்து எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஏற்கனவே ஆய்வாளர் விசாரித்த

சாட்சிகளை விசாரித்தபோது அவர்களிடம் சொன்னது போலவே என்னிடம் சொன்னதால் புதிதாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. ஏற்கனவே ஆய்வாளர் எதிரி மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளார் என்றாலும் அவருக்கு ஆதரவாக நானும் எதிரி மீது சரிவர விசாரணை செய்யாமல் வழக்கின் புலன் விசாரணையை தவறாக தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை நான் காவலுக்கு உட்படுத்தி விசாரிக்கவில்லை.

மறு விசாரணை – இல்லை

Sd/Tmt.U,Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.19 of 2023**

| | | |
|---|---|---|
| Deposition of P.W.20 (L.W.29) | } | Prosecution<br>Defence |
| Name of the Witness | : | திரு. யுவராஜ் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 09.03.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது காரிமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.07.2022ம் தேதி ஏரியூர் வட்ட காவல்

ஆய்வாளராக பணியில் இருந்தபோது இவ்வழக்கின் குற்ற எண்.72/2022 புலன் விசாரணை மேற்கொண்டதில் ஏரியூர் வட்ட காவல் ஆய்வாளர், பாப்பாரப்பட்டி காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்த சாட்சிகள் அனைவரும் அவர்களிடம் வாக்குமூலம் கூறியதுபோலவே எனது விசாரணையிலும் சாட்சிகள் அனைவரும் அதே போல் வாக்குமூலம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கின் சாட்சி முருகேசன், வயது 54, த/பெ. ராஜி, கோவள்ளி கோம்பை கிராமம், பென்னாகரம் வட்டம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல்நிலை காவலர் 1527 சரவணன், தடய அறிவியல் நிபுணர், உதவி இயக்குனர் திரு.மாணிக்கம், மருத்துவர் திரு.மதன்ராஜ் ஆகியோரிடம் அறிக்கை பெற்று விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். Serological Report **அ.சா.ஆ.22**, Biological Report **அ.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தொடர்ந்து உதவி இயக்குனர் குற்ற வழக்கு தொடர்புடையவரிடம் கருத்துரை பெற்று எதிரி மீது 341, 302 இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

சாட்சி முருகேசன் என்பவரை எனக்கு முன்பு இருந்த காவல் ஆய்வாளர்கள் விசாரித்தார்களா என்றால் அவர்களிடம் சொன்னதாக என்னுடைய விசாரணையில் சொன்னார்கள். முருகேசன் என்பவரின் 161 வாக்குமூலத்தில் மாலை 06.00 மணியளவில் பால் வாங்கி கொண்டு வரும்போது கோவளி கோம்பை அருகே வந்த வெள்ளை நிற காரில் வந்தவர்கள் அவரிடம் பேசிவிட்டு சென்றுவிட்டதாகவும் அவரிடம் ஏதோ முகவரி கேட்டதாக தெரிந்தது எனவும் அப்போது தானும் கந்தசாமியும் விநாயகர் கோவில் அருகே பேசி கொண்டிருந்ததாகவும் பிறகு இருவரும் 09.00 மணியளவில்தான் வீட்டிற்கு சென்றதாகவும் சொல்லி இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர் பால் வாங்கி கொண்டு வரும்போது வீட்டிற்கு போகாமல் அங்கேயே நின்று இரவு 09.00 மணி வரை பேசி கொண்டிருந்ததாக சொல்வதே நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் எதிரிக்கும் கந்தசாமி இறப்பிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் காரில் வந்தவர்கள்தான் கந்தசாமி இறப்பிற்கு காரணம் என்றால் சரியல்ல. குபேந்திரன் கந்தசாமி முகவரி மட்டும் தான் சொன்னார் என்றாலும் வேறு எதுவும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் மேற்கொண்டு சரிவர

புலன் விசாரணை செய்து அந்த காரில் வந்தவர்கள் யார் என்று தெரிந்திருந்தால் கந்தசாமி இறப்பிற்கு யார் காரணம் என்று தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை